<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 13/2021 | சாட்சியம் | : | **MW2** |
| **Name** | : | திரு.**Raju** | | | |
| **Date** | : | **08.04.2026** | | | |
| **Time** | : | **11.34 a.m to 12.11 p.m** | | | |

<u>நி.த.சா.**2.**திரு.**Raju** என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியும். பிரமாண வாக்கு மூல சங்கதிகளை படித்து பார்த்து தெரிந்து கொண்டுதான் கையொப்பம் போட்டேன். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் Stock Analyst ஆக இருந்தேன். நான் ஒப்பந்த தொழிலாளி ஆவேன். 24.10.2018 ல் நான் வேலைக்கு சேர்ந்தேன். என்னுடைய பணி நியமன கடிதம் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய பணியானது தரைதளத்தில் வரும் Stock களை பெறுவதும் அனுப்புவதும் தான் என்றால் அவற்றையும் செய்வேன். யாராவது அலுவலத்திற்கு வந்தால் அவர்கள் எதற்காக வந்தார்கள் என்பதை விசாரித்து தெரிந்து கொள்வேன். மனுதாரரை நான் வேலைக்கு சேர்ந்ததில் இருந்து தெரியும். அவர் என்னுடன் அலுவலகத்தில் வேலை பார்ப்பவர் என்பதால் எனக்கு தெரியும். அவரின் கைபேசி எண்

அப்போது இருந்தது தற்போது இல்லை. மனுதாரர் எவ்வாறு வேலை பார்ப்பார் என்பது பற்றி தெரியுமா என்றால் அவர் சைட்டில் தான் வேலை பார்ப்பார். மனுதாரரின் கையொப்பத்தை நான் ஏற்கனவே பார்த்துள்ளேனா என்றால் அலுவலகத்தில் வந்த உடன் அவர் பதிவேடுகளில் கையொப்பம் செய்வார். அப்போது பார்த்துள்ளேன். 10.03.2019 அன்று மாலை 5 மணிக்கு அலுவலகத்தில் என்ன நடந்தது என்று தெரியாது. 01.03.2019 அன்று காலை 10 மணிக்கு என்ன நடந்தது என தெரியும். அன்றைய தினம் மனுதாரர் காலை 10.30 மணியளவில் 3 நபர்களை அழைத்து வந்து சத்தம் போட்டுகொண்டிருந்தார். குடித்துவிட்டு வந்திருந்தார். மனுதாரர் உடன் வந்த மூன்று நபர்கள் எதிர்மனுதாரர் அலுவலகத்தை சேர்ந்தவர்கள் இல்லை. அப்போது நான் என்ன வேலை செய்து கொண்டு இருந்தேன் என்றால் பதிவேடுகள் எழுதிகொண்டிருந்தேன். மனுதாரர் மற்றும் 3 நபர்கள் அலுவலக வரவேற்பு அறை அருகே வரும்போதே சத்தம் போட்டுகொண்டு வந்தார்கள். எனக்கு பணி நேரம் காலை 9.30 மணி முதல் மாலை 6.00 வரை. சத்தம் போட்டுகொண்டு யாரை திட்டினார்கள் என்றால் உள்ளே யார் இருக்கீறார்கள் என சத்தம் போட்டார்கள். நான் மனுதாரரை உள்ளே வரும்படி சொன்னேன். நான் என்ன விஷயம் என கேட்டேன் MD யை பார்க்க வேண்டும் என சொன்னார். MD அன்றைய தினம் அலுவலகத்தில் இருந்தார். நான் மனுதாரரை MD-யிடம் அழைத்து சென்றேனா என்றால்

இல்லை. ஏனென்றால் அலுவலகத்திற்கு வரும் அனைவரும் பதிவேட்டில் கையெழுத்து போட வேண்டும் மனுதாரர் கையெழுத்து போட மறுத்துவிட்டார் அதனால் அழைத்துச் செல்லவில்லை. எனக்கும் மனுதாரருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது பதிவேட்டில் கையொப்பம் போடவில்லை என்றால் MD யை பார்க்க அனுமதிக்க முடியாது என சொன்னேன். மனுதாரர் அவர் உடன் வந்திருந்த நபரிடம் இருந்து ஒரு பேப்பரை வாங்கி அதில் கையெழுத்து போட்டு MD யிடம் கொடுத்துவிடு என தூக்கி எறிந்தார். அதை எடுத்து பார்த்தபோது ராஜினாமா கடிதமாக இருந்தது. கூடவந்தவர் பேப்பரை கொண்டு வந்து இருந்தாரா என்றால் வாக்கு வாதம் நடந்து கொண்டிருந்தபோது கூடவந்தவர் பேப்பரை எடுத்து மனுதாரரிடம் கொடுத்தார். நான் மனுதாரர் போன பிறகு அவர் தூக்கி எறிந்த பேப்பரை கொண்டு போய் MD-யிடம் கொடுத்து நடந்ததை சொன்னேன். இந்த சம்பவம் நடந்தபோது அலுவலகத்தில் வேறு யாரும் என்னுடன் இல்லை. 01.03.2019 அன்று மனுதாரர் காலையில் இருந்து மாலை வரை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் இருந்தார் என சொன்னால் தவறு. நான் மனுதாரருடன் சேர்ந்து மது அருந்தியது இல்லை. எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. அன்றைய தினம் நான் தான் காலை 10.30 மணி அளவில் மது அருந்திவிட்டு அலுவலகத்தில் இருந்தேன் என்றால் தவறு. மனுதாரர் என் முன்னிலையில் பேப்பரில் கையெழுத்து போட்டதை நான் பார்த்தேன்.

எங்கள் கம்பெனியில் வேலை செய்யும் நபர்கள் ராஜினாமா கடிதம் கொடுத்தால் அதை வாங்கி வைத்து கொள்ள எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பணி நியமன உத்தரவை HR அவர்கள் கொடுப்பார்கள். ராஜினாமா கடிதத்தை ஏன் HR யிடம் கொடுக்காமல் MD யிடம் கொடுத்தேன் என்றால் மனுதாரர் பிரச்சனை செய்துவிட்டு போனதால் MD யிடம் கொடுத்தேன். ராஜினாமா கடிதத்தை பெற்றுக்கொண்டு MD மனுதாரரை பணி நீக்கம் செய்து விடலாம் என என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. ராஜினாமா கடிதத்தில் உள்ள கையெழுத்து போலியானது என்பதால் அது உண்மை என காட்ட என்னை சாட்சியாக விசாரிக்கீறார்கள் என்றால் இல்லை. நான் சொல்வது போன்று சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

<u>நீதிமன்ற கேள்வி</u>

உங்கள் அலுவலகத்தில் CCTV உள்ளதா ?

<u>பதில்</u> உள்ளது.

<u>கேள்வி</u> - சம்பவம் நடந்த அன்றைய தினம் CCTV வேலை செய்ததா?

<u>பதில்</u> செய்தது.

<u>கேள்வி</u> **-** 01.03.2019 அன்று காலை 10.30 மணி அளவில நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் பதிவாகி இருக்கும?

<u>பதில்</u> - இருக்கும்.

<u>கேள்வி</u> **-** நான் சொன்ன தகவல் உண்மையா என அறிந்துகொள்ள MD CCTV பதிவுகளை பார்வையிட்டாரா?

<u>பதில்</u> - தெரியாது.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.04.08 19:25:13 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:08.04.2026.